بسم الله الرحمن الرحيم

**FRIDAY SERMON 19-09-2014**

# *The Heart - A Study (1)*

# இதயம்-ஓர் ஆய்வு (1)

## HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)

உலகமக்களுக்கு சலாம் தெரிவித்தப் பிறகு தஷ்ஹீதும் தஅவ்வுசும் அல்ஃ. பாத்திஹாவும் ஓதி ஹஸ்ரத் கலீஃ.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அ) அவர்கள் கீழ் வருமாறு கூறினார்.

அல்லாஹ் மனிதனைப் படைத்திருப்பது மிக சிறப்பான நிலையிலாகும். அல்லாஹ்விலிருந்துள்ள ஞானம் பெற்றுக் கொள்வதற்கான ஆற்றல் இருப்பதால் மனிதனே ஆவான் அல்லாஹ்வின் மிக உன்னதமான படைப்பினம். இறை ஞானம் பெற்றுக் கொள்வது இதயம் வழியாகும். அல்லாஹ்வைப் பற்றிய ஞானம் இதயத்திற்கு உண்டு. அல்லாஹ்வின் அருகாய்மையை சென்றடைய அது கடினமான உழைப்பை மேற்க் கொள்ளுகிறது. மற்றனைத்து உறுப்புகளும் இதயத்திற்கு சேவைப் புரிகின்ற தோழர்கள் மட்டுமாகும். அல்லாஹ் அல்லாதவற்றைவயில் இருந்து இதயத்தைப் பாதுகாத்துக் கொண்டால் அதவாது அல்லாஹ்வில் இருந்து விலக்கிக் கொள்ளும் நபர்களில் இருந்தும், பொருள்களில் இருந்தும் இதயத்தைப் பாதுகாத்தால் அத்தகை இதயங்களை அல்லாஹ் எற்றுக் கொள்ளுகின்றான். அல்லாஹ் அல்லாவற்றையுடன் தொடர்புடையதாக இதயம் நிலை கொண்டால் அல்லாஹ் அதை நிராகரித்துக் கொள்கின்றான். இதயத்தை தூய்மைப்படுத்திக் கொள்வதற்காக முயர்சித்தால் அல்லாஹ்வின் திருப்தி கிடைத்து விடும். மாறாக செயல்பட்டால் இதயம் பாவங்களால் நிறைந்துவிடவும் கட்டுபாடின் எல்லைகையைத் தாண்டி விடவும் செய்யும். உண்மையில் அல்லாஹ்விற்க்கு கட்டுப்படுவது இதயமாகும். செயல்களும் ஆராதனையும் இதய காட்டுப்பாட்டின் விளைவாகும். ‘‘ஷரிஅத்தின்’’ எல்கையை அத்து மீறிக் கொள்வது

இதயமாகும். இதயம் வரம்பு மீறிக் கொள்வதன் காரணமாக மனிதனின் செயல்களும் எல்கையைத் தாண்டி செல்கின்றது. மனிதன் தனது இதயத்தை அங்கீகரித்துக் கொள்கின்றான் என்றால் அவன் சுயமாகவே அவனை அங்கீகரித்துக் கொள்கின்றான் என்று பொருள். அவனது இதயத்தை அங்கீகரித்துக் கொள்ளும் விஷயத்தில் அவன் தோல்வியடைந்தால் அவன் அவனயே அங்கீகரித்துக் கொள்கின்ற விஷயத்தில் தோல்வியடைந்தான் என்று அர்த்தம். அது வாயிலாக அல்லாஹ்வை அங்கீகரித்துக் கொள்ளுவதிலும் அவன் தோல்வியை எட்டுகின்றான் துரதிர்ஷ்டத்தால் பெரும் பான்மை மக்களும் நப்ஸையும் இதயத்தையும் குறித்து அறிவற்றவர்கள் ஆவார்கள்.

எனது முஸ்லீம் சகோதரி சகோதரர்களே! நமது இதயங்களை கட்டுப்படுத்துவது அல்லாஹ்வே ஆவான். அவன் நாடுகின்ற நிலையில் அதனை திருப்பிக் கொள்கின்றான். அவன் நாடுகின்றதை இதயத்திற்கு வழங்கி கொள்கின்றான். அவன் நாடுகின்றதை இதயத்தில் இருந்து நீக்கம் செய்கின்றான் அல்லாஹ் கூறுகின்றான்.

**''எனினும் அல்லாஹ் நம்பிக்கையை உங்களுக்கு பிரியமுடையதாக்கி உங்கள் இதயங்களிலும் அதனை அழகாக்கியும் வைத்தான் (49-8)**

**''எவர் அல்லாஹ் மீது நம்பிகைக் கொள்கின்றாரே அவருடைய இதயத்தை அவன் நேர் வழியில் செலுத்துகின்றான்'' (64-12)**

**'' மேலும் அவர்கள் உள்ளங்ளுக்குக்கிடையில் அன்பின் பிணைப்பை உண்டாக்கினான். பூமியிலுள்ள அனைத்தையும் நீர் செலவு செய்த போதிலும் அவர்கள் உள்ளங்களுக்கிடையே அத்தைகைய (அன்பின்) பிணைப்பை உண்டாக்கியிருக்க முடியாது. ஆனால் நிச்சயமாக அல்லாஹ் அவர்களிடையே அப்பிணைப்பை ஏற்படுத்தியுள்ளான்.'' (8-64)**

8 ஆம் அதிகாரம் 64-ம் வசனத்தில் விளக்கமளித்திருப்பது, அரபிகளின் நிலையைக் குறித்தாகும். அரபிகளின் இதயங்கள் பொறாமை, தேச உணர்சி, நான் என்ற எண்ணம் போன்ற தீய குணங்களால் கடுமையாகயிருந்தது. நமது பிரிய தூதர் ஹஸ்ரத் முஹமது (ஸல்) வை அல்லாஹ் அங்கு நியமித்துக் கொண்டு, அவர்களை இஸ்லாமிக நம்பிகையின் பால் கொண்டு வரவும், தூய நபி (ஸல்)வின் போதனைகளை அவர்கள் பின்பற்றி கொள்ளவும் செய்தனர். அது மூலமாக அவர்களின் இதயங்களில் அன்பும் ஒற்றுமையும் வளர்ந்தது. தவறான முன் விதிகளுக்கும் பொறாமைகளுக்கும் பதிலாக அன்பும் சகோதரத்துவவும் முனைத்தது. மனிதர்களின் இதயத்தில் கட்டுப் பாடு அல்லாஹ்வின் கரங்களில் ஆகும் என்பதற்கு இது போதுமான சான்றாகும். அவன் நாடுகின்ற திசைகளின் பால் இதயங்களை அவன் திருப்பிக் கொள்கின்றான். குகையின் பால் ஒதுங்கி வாழ்ந்தவர்களின் இதயங்களுக்கு

சகிப்புத் தன்மையை வழங்கியது அல்வாஹ்வே ஆவான். அவர்களின் வீடுகளில் இருந்துள்ள சுகத்தையும் மகிழ்ச்சியையும் அவர்கள் தவிர்த்துக் கொண்டார்கள்.

அல்லாஹ் கூறுகின்றான்.

**''அவர்கள் எழுந்து நின்று வானங்களுக்கும் பூமிக்கும் இறைவனாகிய அவனே எங்களுடைய இறைவன் . எக்காலத்தும் அவனையன்றி வேறு எவரையும் நாயனென்று அழைக்க மாட்டோம் அப்படிச் செய்தால் வரம்பு மீறியதைச் சொன்னவர்கள் ஆவோம்''. என்று அவர்கள் உறுதியாகக் கூறிய நிலையில் அவர்கள் இதயங்களை நாம் வலுப்படுத்தினோம்'' (18-15)**

அவர்களின் உரையாடல்களை கீழ் காணும் நிலையில் அல்லாஹ் கூறிகின்றான். **''அவர்களையும் அவர்கள் வணங்கும் அல்லாஹ் அல்லாதவற்றையும் விட்டு விலகி நீங்கள் குகையின் பால் ஒதுங்கிக் கொள்ளுங்கள். உங்களுடைய இறைவன் தன்னுடைய கருணையில் இருந்து உங்களுக்கு விசாலமாக கொடுத்து உங்கள் காரியத்தில் உணவு பிரச்சனையை உங்களுக்கு எளிதாகத் தருவான்'' (18-17)**

அல்லாஹ்வை நேசிக்கின்றவர்களைக் குறித்து இவ்வாறு கூறுகின்றான்.

**''அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்பும் சமூகத்தினர் அல்லாஹ்வையும் அவனது தூதனையும் பகைத்துக் கொண்டவர்களை நேசிப்பவர்களாக நீர் காணமாட்டிர். அவர்கள் தங்கள் பெற்றோர்களாயினும் தங்கள் சகோதரர்களாயினும் தங்கள் குடும்பத்தினராயினும் சரியே. அத்தகையவர்களின் இதயங்களில் ஈமானை எழுதி விட்டான் மேலும் அவன் தன்னிடமிருந்து ஆன்மாவைக் கொண்டு பலப்படுத்தியிருக்கின்றான். சொர்க்கச் சோலைகளில் என்றென்றும் இருக்கும் படி அவர்களை பிரவேசிக்கச் செய்வான். அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக் கொண்டு இருக்கும். அல்லாஹ் அவர்களைப் பொருத்திக் கொண்டான். அவர்களும் அவனைப் பொருத்திக் கொண்டார்கள் அவர்கள் தாம் அல்லாஹ்வின் கூட்டத்தினர். அறிந்து கொள்க'' (58-23)**

முஸ்லீம்களுக்கு எதிராக போர் செய்வதற்காக ஒன்று சேர்ந்த முஷ்ரீக்கீங்களைக் குறித்து அல்லாஹ் இவ்வாறு அறியிக்கின்றான்

**''விரைவிலேயே நிராகரிப்பவர்களின் இதயங்களில் திகிலை உண்டாக்குவோம், ஏனெனில் எந்த விதமான ஆதாரமும் இறக்கிவைக்கப்படாமல் இருக்க அவர்கள் அல்லாஹ்வுக்கு இணை வைத்தார்கள். தவிர அவர்கள் தங்குமிடம் நெருப்புதான். அக்கிரமக்காரர்கள் தங்கும் இடங்களிலெல்லாம். அது தான் மிகவும் கெட்டது'' (3-152)**

புனித குர் ஆனை அங்கீகரிக்காமல் நிராகரித்துக் கொண்ட முஷ்ரீக்கீங்களை குறித்து அல்லாஹ் கூறுகின்றான்.

இந்த குர் ஆனைக் குறித்து அவர்கள் சிந்திக்கவில்லையா? அவர்களின் இதயங்கள் அடைந்து விட்டதோ?

ஹஸ்ரத் முஹமது (ஸல்) அவர்கள் இந்த குர் ஆன் வசனம் ஓதிய போது எமன் நாட்டை சார்ந்த ஒரு புது சஹாபி கூறியதாக இவ்வாறு ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கின்றது.

‘‘ அவர்கள் இதயங்களை அல்லாஹ் சீல் வைத்து விட்டான். அந்த சீலை அல்லாஹ் நீக்கும் வரையிலும் அது அங்கு நிலை கொள்ளும். ஹஸ்ரத் உமர்(ரலி) அவர்கள் இந்த புது சஹாபியை மனதில் வைத்திருந்தார். பிறகு ஹஸ்ரத் உமர்(ரலி) அவர்கள் கலீ.:.பாவாக நியமிக்கப்பட்ட வேளையில் இந்த சஹாபியின்தொண்டு தனது அரசங்கத்திற்காக தேவைப்பட்டிருந்தார்.

அல்லாஹ் திருமறையில் கூறுகின்றான்.

**‘‘அல்லாஹ் யாருக்கு நேர் வழி காட்ட நாடுகின்றானோ அவருடைய இதயத்தை இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்காக விசாலமாக்குகின்றான். யாரை அவன் வழி கெடுக்க நாடுகின்றானோ அவருடைய இதயத்தை வானத்தில் ஏறுபவன் இதயத்தைப் போல் இறுகீச் சுருங்கும் படிச் செய்கின்றான். இவ்வாறே நம்பிக்கை கொள்ளாதவர்களுக்கு அல்லாஹ் தண்டனையை ஏற்படுத்துகின்றான்’’ (6-126)**

அல்லாஹ் ஒருவருக்கு ‘‘ஹிதாயத்’’ வழங்கிக் கொள்ள நாடினால் ஒரு பிரகாஷத்தை அவருடைய இதயத்தில் இட்டுக் கொடுக்கின்றான். அப்போது அவர் அதை அங்கீகரத்துக் கொள்ளவும் ஏற்றுக் கொள்ளவும் செய்கின்றான். மேல் கூறிய ஆயத்து இறங்கிய போது இதயத்தை விசாலமாக்குவதைக் குறித்து நபி (ஸல்) விடம் கேட்டதாக ரிப்போர்ட் செய்யப்பட்டிருகின்றது.

நபி (ஸல்) அவர்கள் பதிலாக கூறினார். **‘‘அது ஒருவகைப்பட்ட பிரகாஷம் ஆகும். நம்பிக்கையாளர்களின் இதயங்களில் அல்லாஹ் அதனை உருவாக்குகின்றான். அது உண்மையின் ஒரு அடையாளத்தை இதயத்தில் தோற்றுவிக்கின்றது. அதன் விளைவாக உண்மையை சீக்கிரத்தில் ஏற்றுக் கொள்ள முடியும்’’** இந்நேரம் கேட்க்கப்பட்டு இந்த அடையாளங்கள் எவ்வாறு தென்படும் அப்பொழுது ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் பதில் கூறினார்கள்.

**‘‘பரலோகத்திற்கு வேண்டிய தயாரெடுப்புக்கு முன் உரிமை வழங்கி கொள்ளவும் இவ்வுலக விஷயங்களை ஒரு பகுதியில் மாற்றி வைத்துக் கொள்ளவும் செய்கின்றன**’’. இதுவே பிரகாஷம் பிரவேசிப்பதன் முன் அடையாளங்களாகும்’’

ஹஸ்ரத் முஹமது (ஸல்) அவர்கள் பெரும் பான்மை நேரவும் இவ்வாறு பிரார்த்தனை செய்திருந்தார்.

**‘‘அல்லாஹ்வே என் இதயத்தில் பிரகாஷத்தை உருவாக்குவாயாக’’** ஆமீன்

அல்லாஹ் கூறுகின்றன்.

**‘‘நாம் அவருடைய உள்ளங்களையும் அவர்களுடைய பார்வைகளையும் திருப்பி விடுவோம்’’ (6-111)**

**‘‘அல்லாஹ் மனிதர்களுக்கும் அவன் இதயத்திற்கும் இடையில் ஆதிக்கம் செலுத்துகின்றான் ’’ (8-25)**

**‘‘ஒரு முறை அல்லாஹ், மனிதனுக்கும் அவன் இதயத்திற்கும் இடையில் ஆதிக்கம் செலுத்தினால் மனிதனுக்கு ஒரு நம்பிக்கையாளரோ அல்லது அவநம்பிக்கையாளரோ ஆகயியலாது’’.** ஆனால் அல்லாஹ்வின் அனுமதியோடு ஆக முடிந்து விடும் என குர் ஆன் பண்டிதர்கள் அதற்கு விளக்கமளித்திருகின்றார்கள்.

முஹமது (ஸல்) அவர்கள் கூறினார்கள் ‘‘மனித இதயங்கள் அல்லாஹ்வின் இரு விரல்களின் காட்டுப் பாட்டில் அமைந்துள்ளது. அவன் நாடுகின்ற திசையின் பால் அதை அவன் திரும்பிக்கொள்ளுகின்றன். நபிகரீம் (ஸல்) அவர்கள் இவ்வாறு பிராத்தனை செய்தார்கள்.

**‘‘ இதயங்களை கட்டுப்படுத்துகின்றவனே! உன் மதத்தில் என் இதயத்தை நிலை நாட்டிக் கொள்வாயாக!** ஆமீன்.

ஒரு சஹாபி கேட்டார். ‘‘அல்லஹ்வின் தூதரே நீங்கள் கொண்டு வந்த எல்லா நம்பிக்கைகளையும் நாங்கள் எற்றுக் கொண்டோம். எங்களைக் குறித்து உங்களுக்கு எதாவது அய்யம் இருக்கின்றதா? ஹஸ்ரத் முஹமது (ஸல்) அவர்கள் பதிலாளித்தார் **‘‘ஆம்’’ ‘‘மனித இதயங்கள் அல்லாஹ்வின் காட்டுபாட்டில் ஆகும். அவன் சிலரை நேர் வழியிலும் மற்று சிலரை தவறான வழியிலும் விடுகின்றான். ஆகவே நமது இதயங்களுக்கு ஹிதாயத்து வழங்கி இரட்சிப்பதற்கும், தவறான பாதயில் செல்லாமல் இருப்பதற்குமாக துவா செய்து கொண்டிருக்க வேண்டும். அவனது பிரத்தேகமான அருள்கள் நம்மிடம் இறங்குவதற்கும் நாம் மன்றாடிக் கொள்ள வேண்டும். அவன் அனது அருள்களில் ராஜகீய வல்லமை உள்ளவன் ஆவான்’’**

ஹஸ்ரத் முஹமது (ஸல்) அவர்கள் இதயங்களின் பல்வேறு நிலைகளைக் குறித்து நன்கு அறிவுள்ளவர் ஆவர். இதயங்கள் பல்வேறு விஷயங்களில் மூழ்கிக் கொள்ளுவதேயாகும் திடிரென ஒரு நிலையில் இருந்து மற்றொரு நிலையில் அது பரிணமிக்கின்றது. மனித இதயம், முழுமையாக மனிதனின் கட்டுப்பாட்டிற்கு அப்பார்பட்ட விஷயமாகும் என்பது இதயத்தின் இந்நிலையைக் குறித்து நுட்பமாக சிந்திக்கின்றவர்களுக்கு

மட்டுமே அதை உணரயியலும். அல்லாஹ்வை தன் உள்ளம் வழியாக அடைய கடினமாக முயர்சிக்கின்றவர்களுக்கு கிடைக்கும் ஞான அமிர்தமாகும் அது.

இன்று இந்த சொற்பொழிவை நான் நிறைவு படுத்துகின்றேன். வருகின்ற வெள்ளிக்கிழமையும் இதே விஷயத்தைத் தொடர்ந்துக் கொள்வதற்கான ‘‘தௌபீக்’’ வழங்க அல்லாஹ்விடம் நான் பிரார்த்தனை செய்கின்றேன். இன்ஷா அல்லாஹ். அவனது பிரகாஷத்தால் நன்மை ஒளிமயமாக்குவனாக. உண்மையைத் தேடிக் கொள்ளுகின்றவர்களுக்கு இந்த ஒளியை பகுத்தறிய அவன் அருள் புரிவானாக! அதில் இருந்து முற்றிலும் நல்ல பலன் வழங்குவானாக. ஆமீன்.


Issued by:

Jamaat UI-Sahih-Al-lslam

Dawa Department

Tamil Nadu (Regd.No: A/693)

Web: www.jamaat-ul-sahih-al-islam.com

Translated by:

**Azim Ahmad**

Sadr Sahibul Faraj

Kerala / Tamil Nadu

E-Mail: azimahmad070@gmail.com

Cell: 9947181650

9789180817